மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2021
அ.வ.எண்.64/2021

1. நல்லதம்பி
2. கண்ணன்
3. பாஸ்கர்
4. ராமலிங்கம்
5. அர்ஜுன் விஜய் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. சரவணன் (இறந்தவர்)
(இ.ம.எண்.06/2022 ல் 01.03.2022 ம்
தேதியிட்ட உத்தரவின்பேரில் திருத்தப்பட்டது)
2. கலாமணி
3. காயத்ரி
4. மைனர் இளவரசி
(அவரது சார்பாக அவரது தாயார் 2 ம் எதிர்மனுதாரர்
காப்பாளராக நியமிக்கப்படுகிறார்) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 20.12.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.சக்திவேல் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சிவராமன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) வாதிகள்/மனுதாரர்கள் விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மனு சொத்து நல்லுகவுண்டருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. நல்லுகவுண்டருக்கு முதல் மனைவியின் மூலம் செம்மண்ண மற்றும் துரைசாமி கவுண்டர் என இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மனைவி மூலம் மாரிமுத்து என்ற மகன் உள்ளார்.

(ii) நல்லுகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பூர்வீக சொத்தை அவரது 3 மகன்களும் வாய்மொழி பாகபிரிவினை செய்து கொண்டனர். அதன்படி செம்மண்ண கவுண்டருக்கு கிழக்குபுறத்தில் ச.எண்.147, 148, 151 மற்றும் 107ல் 15 ஏக்கரும், துரைசாமிக்கு ச.எண்.102, 147, 107ல் 12 ஏக்கரும், மாரிமுத்துவிற்கு தெற்குபுறத்தில் ச.எண்.147, 148, 102ல் 12 ஏக்கரும் ஒதுக்கப்பட்டு அவரவர் சுவாதீனத்தில் இருந்துவருகின்றனர்.

(iii) மேற்படி செம்மண்ண கவுண்டர் தனது பூர்வீக சொத்துகளை சுற்றியுள்ள சில சொத்துகளையும் கிரயம் பெற்றிருந்தார். இந்நிலையில் மேற்படி செம்மண்ண கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளான நல்லதம்பி, ஜெயராமன், ராமலிங்கம் ஆகியோருக்கு இடையே மேற்படி பூர்வீக சொத்துகள் மற்றும் சுய சம்பாத்திய சொத்துகள் குறித்து 11.02.2009ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது.

(iv) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துகளில் மல்லிகுந்தம் கிராமம் ச.எண்.148 மற்றும் ச.எண்.151ல் உள்ள பூர்வீக சொத்துகளின் பேரில் மேற்படி ராமலிங்கத்தால் 30.12.2019ம் தேதியில் 5ம் வாதியின் பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது. மேற்படி தானசெட்டில்மெண்டில் கண்டுள்ள சொத்துகளை தாவா வழித்தடத்தின் மூலமாக தான் செல்ல முடியும். மேற்படி தாவா வழிப்பாதையின் தெற்கே 2அடி உயரத்தில் கல்கரையும், வடக்கே வரிசையாக சுமார் 80 பனைமரங்களும் பொதுவில் நடப்பட்டுள்ளன.

(v) மேற்படி தாவா வழிப்பாதையானது ச.எண்.102/2A1ல் அமைந்துள்ளது. மேற்படி வழிப்பாதையின் வழியாக தான் ஊர் மாரியம்மன் கோவிலுக்கு செல்ல முடியும். மேற்படி ச.எண்.102 ஆனது ச.எண்.102/2A1 மற்றும் ச.எண்.102/2A2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டு வாய்மொழி பாகபிரிவினையின் போது ச.எண்.102/2A1 ஆனது சென்றாயனுக்கும், ச.எண்.102/2A2 ஆனது மாரிமுத்துவிற்கும் ஒதுக்கப்பட்டது. தற்போது கிழமேலாக செல்லும் தாவா தடவழி பாதையானது 1ம் பிரதிவாதியின் தந்தை சென்றாயனுக்கு ஒதுக்கப்பட்ட ச.எண்.102/2A1ல் அமைந்துள்ளது. மேற்படி தடவழியானது இம்மனுவில் ABCD என காட்டப்பட்டுள்ளது.

(vi) ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து தாவா தடவழி பாதையானது மேற்கு நோக்கி சென்று கிராம நத்தத்தின் வழியாக தென்வடலாக செல்லும் பென்னாகரம் பிரதான சாலையை அடைகிறது. செம்மண்ண கவுண்டரின் வாரிசுகளான வாதிகள் தாவா தடவழி பாதையின் வழியாக மட்டுமே பென்னாகரம் தடவழி சாலையை அடைய முடியும்.

(vii) ச.எண்.102/2A1ல் தெற்குபுறமாக அமைந்துள்ள தாவா தடவழி பாதையானது கிழமேல் இருபுறமும் 23 அடி அகலத்திலும், தென்வடல் இருபுறமும் 1069 அடி நீளத்திலும் அமைந்துள்ளது. மேற்படி தாவா வழி தடமானது நல்லுகவுண்டரின் காலத்திற்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(viii) அதேபோல் ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து தென்வடல் இருபுறமும் 2 மீட்டர் அகலத்திலும், மேற்கில் 88.2 மீட்டர் நீளமும், கிழக்கில் 94.6 மீட்டர் கொண்ட மற்றொரு வழித்தடமானது ச.எண்.102/2A1ன் மேற்குபுறமாக உள்ளது. மேற்படி வழித்தடம் இம்மனுவில் WXYZ என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தடவழியின் மூலமாக தான் ச.எண்.107/10 மற்றும் ச.எண்.147/2 ஆகிய பூர்வீக சொத்துகளுக்கு செல்ல இயலும். மேற்படி தடவழியை தவிர ச.எண்.107/10 மற்றும் ச.எண்.147/2ல் உள்ள சொத்துகளுக்கு செல்வதற்கு வேறு தடவழி இல்லை.

(ix) ச.எண்.102/2A1ல் அமைந்துள்ள ABCD, WXYZ ஆகிய தடவழிகளின் மூலமாக தான் வாதிகள் தங்களது பூர்வீக சொத்துகளுக்கு செல்ல முடியும். மேற்படி ABCD தடவழியை தான் வாதிகளும், பிரதிவாதிகளும் பொது தடமாக இதனால்வரை பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி ABCD தடவழியின் நடுவே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னரே 3 அடி ஆழத்தில் 2 குடிநீர் குழாய் இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் குழாய்களின் வழியாக தான் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளது நிலங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

(x) இந்நிலையில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் கடந்த 23.03.2021ம் தேதியில் வாதிகளுடன் சச்சரவில் ஈடுபட்டு, மேற்படி தடவழியை வாதிகள் பயன்படுத்துவதை தடுத்தனர். பிரதிவாதிகளின் மேற்படி சட்டத்திற்கு புறம்பான செயல்களுக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லாததால் பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள்/மனுதாரர்கள் வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்:</u>

<u>(குறிப்பாணையின் பேரில் வழக்கின் பதிலுரை இம்மனுவின் எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது)</u>

(i) மனு பொய்யானது. உண்மைக்கு புறம்பானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சொத்து உட்பட நல்லுகவுண்டருக்கு சுமார் 40 ஏக்கர் பூர்வீக நிலம் இருந்தது. நல்லுகவுண்டருக்கு முதல் மனைவியின் மூலம் செம்மண்ண மற்றும் துரைசாமி கவுண்டர் என இரண்டு மகன்கள் உள்ளனர். இரண்டாவது மனைவி மூலம் மாரிமுத்து என்ற மகன் உள்ளார்.

(ii) நல்லுகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு அவரது பூர்வீக சொத்தான 40 ஏக்கர் நிலத்தை அவரது 3 மகன்களும் வாய்மொழி பாகபிரிவினை செய்து கொண்டனர். அதன்படி செம்மண்ண கவுண்டருக்கு கிழக்குபுறத்தில் ச.எண்.147, 148, 151 மற்றும்

107 ல் 15 ஏக்கரும், துரைசாமிக்கு ச.எண்.102, 147, 107 ல் 12 ஏக்கரும், மாரிமுத்துவிற்கு தெற்குபுறத்தில் ச.எண்.147, 148, 102 ல் 12 ஏக்கரும் ஒதுக்கப்பட்டு அவரவர் சுவாதீனத்தில் இருந்துவருகின்றனர்.

(iii) மேற்படி செம்மண்ண கவுண்டர் தனது பூர்வீக சொத்துகளை சுற்றியுள்ள சில சொத்துகளையும் கிரயம் பெற்றிருந்தார் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். இந்நிலையில் மேற்படி செம்மண்ண கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளான நல்லதம்பி, ஜெயராமன், ராமலிங்கம் ஆகியோருக்கு இடையே மேற்படி பூர்வீக சொத்துகள் மற்றும் சுய சம்பாத்திய சொத்துகள் குறித்து 11.02.2009 ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்பது பொய்யானதாகும்.

(iv) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் தனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துகளில் மல்லிகுந்தம் கிராமம் ச.எண்.148 மற்றும் ச.எண்.151 ல் உள்ள பூர்வீக சொத்துகளின் பேரில் மேற்படி ராமலிங்கத்தால் 30.12.2019 ம் தேதியில் 5 ம் வாதியின் பெயருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டது என்பது பொய்யானதாகும். மேற்படி தானசெட்டில்மெண்டில் கண்டுள்ள சொத்துகளை தாவா வழித்தடத்தின் மூலமாக தான் செல்ல முடியும் என்பதும், மேற்படி தாவா வழிப்பாதையின் தெற்கே 2 அடி உயரத்தில் கல்கரையும், வடக்கே வரிசையாக சுமார் 80 பனைமரங்களும் பொதுவில் நடப்பட்டுள்ளன என்பதும் உண்மையே. ஆனால் அவற்றில் மனுதாரர்களுக்கு பொதுவில் உரிமை உள்ளது என்பது தவறானதாகும்.

(v) மேற்படி தாவா ABCD வழிப்பாதையானது ச.எண்.102/2A1 ல் அமைந்துள்ளது உண்மையே ஆனால் மேற்படி வழிப்பாதையின் வழியாக தான் ஊர் மாரியம்மன் கோவிலுக்கு செல்ல முடியும் என்பது தவறானதாகும். ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து தாவா தடவழி பாதையானது மேற்கு நோக்கி சென்று கிராம நத்தத்தின் வழியாக தென்வடலாக செல்லும் பென்னாகரம் பிரதான சாலையை அடைகிறது. செம்மண்ண கவுண்டரின் வாரிசுகளான வாதிகள் தாவா தடவழி பாதையின் வழியாக மட்டுமே பென்னாகரம் தடவழி சாலையை அடைய முடியும் என்பது தவறானதாகும்.

(vi) ச.எண்.102/2A1 ல் தெற்குபுறமாக அமைந்துள்ள தாவா தடவழி பாதையானது கிழமேல் இருபுறமும் 23 அடி அகலத்திலும், தென்வடல் இருபுறமும் 1069 அடி நீளத்திலும் அமைந்துள்ளது என்பதும், மேற்படி தாவா வழி தடமானது நல்லுகவுண்டரின் காலத்திற்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதும் தவறானதாகும்.

(vii) அதேபோல் ஊர் மாரியம்மன் கோவிலிலிருந்து தென்வடல் இருபுறமும் 2 மீட்டர் அகலத்திலும், மேற்கில் 88.2 மீட்டர் நீளமும், கிழக்கில் 94.6 மீட்டர் கொண்ட மற்றொரு வழித்தடமானது ச.எண்.102/2A1 ன் மேற்குபுறமாக உள்ளது என்பது தவறானதாகும். மேற்படி வழித்தடம் இம்மனுவில் WXYZ என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தடவழியின் மூலமாக தான் ச.எண்.107/10 மற்றும் ச.எண்.147/2 ஆகிய பூர்வீக சொத்துகளுக்கு செல்ல இயலும் என்பதும், மேற்படி தடவழியை தவிர ச.எண்.107/10 மற்றும் ச.எண்.147/2 ல் உள்ள சொத்துகளுக்கு செல்வதற்கு வேறு தடவழி இல்லை என்பதும் தவறானதாகும்.

(viii) ச.எண்.102/2A1 ல் அமைந்துள்ள ABCD, WXYZ ஆகிய தடவழிகளின் மூலமாக தான் வாதிகள் தங்களது பூர்வீக சொத்துகளுக்கு செல்ல முடியும் என்பது தவறானதாகும். மேற்படி ABCD தடவழியை தான் வாதிகளும், பிரதிவாதிகளும் பொது தடமாக இதனால்வரை பயன்படுத்தி வருகின்றனர் என்பதும், மேற்படி ABCD தடவழியின் நடுவே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னரே 3 அடி ஆழத்தில் 2 குடிநீர் குழாய் இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி குடிநீர் குழாய்களின் வழியாக தான் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளது நிலங்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது என்பதும் தவறானதாகும்.

(ix) இந்நிலையில் 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் கடந்த 23.03.2021 ம் தேதியில் வாதிகளுடன் சச்சரவில் ஈடுபட்டு, மேற்படி தடவழியை வாதிகள் பயன்படுத்துவதை தடுத்தனர் என்பதும் தவறானதாகும். வாதிகளுக்கு மேற்படி ABCD தடவழியில் எவ்வித உரிமையும் இல்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.102/2A1ல் அமைந்துள்ள ABCD, WXYZ ஆகிய தடவழிகளின் மூலமாக தான் மனுதாரர்கள் தங்களது பூர்வீக சொத்துகளுக்கு செல்ல முடியும். மேற்படி ABCD தடவழியை தான் மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் பொது தடமாக இதுநாள் வரை பயன்படுத்தி வருகின்றனர் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள் கடந்த 23.03.2021ம் தேதியில் மனுதாரர்களுடன் சச்சரவில் ஈடுபட்டு, மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை தடுத்ததால் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் ச.எண்.102/2A1ல் அமைந்துள்ள ABCD, WXYZ ஆகிய தடவழிகளின் மூலமாக தான் மனுதாரர்கள் தங்களது பூர்வீக சொத்துகளுக்கு செல்ல முடியும் என்பதும், ABCD தடவழியை தான் வாதிகளும், பிரதிவாதிகளும் பொது தடமாக இதனால்வரை பயன்படுத்தி வருகின்றனர் என்பதும், மேற்படி ABCD தடவழியின் நடுவே சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னரே 3 அடி ஆழத்தில் 2 குடிநீர் குழாய் இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் தவறானது என்றும், கடந்த 23.03.2021ம் தேதியில் மனுதாரர்களுடன் சச்சரவில் ஈடுபட்டு, மேற்படி தடவழியை மனுதாரர்கள் பயன்படுத்துவதை எதிர்மனுதாரர்கள் தடுத்தனர் என்பதும் தவறானது என்றும், மனுதாரர்களுக்கு மேற்படி ABCD தடவழியில் எவ்வித உரிமையும் இல்லாததால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தரப்பினர்களின் வாதுரைகளை கவனமாக பரிசீலனை செய்கையில் மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்த பங்காளிகள் என தெரிய வருகிறது. அதேபோல் மல்லிகுந்தம் கிராமம், ச.எண்.102/2A1–ல் தெற்கு புறத்தில் கிழ மேலாக வழிப்பாதை அமைந்துள்ளது என்பதும் தெரியவருகிறது. மேற்படி வழிப் பாதையானது நல்லுகவுண்டர் காலத்திலேயே அமைக்கப்பட்டு, பின்னர் அவரது மகன்களான செம்மண்ணகவுண்டர், துரைசாமி, மாரிமுத்து ஆகியோர்களிடையே 75 ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டபோது, மேற்படி மூவருக்கும் பொதுப்பாதையாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ABCD பாதை கிழமேல் இருபுறமும் 23 அடி அகலத்திலும், தென்வடல் இருபுறமும் 1069 அடி நீளத்திலும் உள்ளது எனவும், மேற்படி பாதையை மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் மேச்சேரி – பென்னாகரம் பிரதான சாலைக்கு செல்ல வழித்தடமாக பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி தடவழி சுமார் 8 அடி அகலம் கொண்டது எனவும், மேற்படி தடவழியை சுற்று வட்டார பகுதியிலுள்ள பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும், மேற்படி தடவழி மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட குடும்ப சொத்து என்ற பொழுதிலும் சுற்று வட்டாரத்திலுள்ள பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v) அதேபோல் மனுதாரர்களால் தாவா ABCD வழிப்பாதையின் வடக்குபுறத்தில் மேற்படி 80 பனை மரங்கள் வரிசையாக அமைந்துள்ளதாகவும், அவை சுமார் 100 ஆண்டுகள் பழமையானவை என்றும், நல்லுகவுண்டர் காலத்திலேயே அவை நடப்பட்டவை என்றும், மேற்படி பனைமரங்களில் மனுதாரர்களுக்கும் பொதுவில் உரிமையுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) மேலும் மேற்படி தடவழியானது மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களின் முன்னோர்களால் பென்னாகரம் பிரதான சாலையை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததால் மேற்படி தடவழியானது இருவருக்கும் பொதுவான பொதுப்பாதை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடவழியானது துரைசாமிக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கும், மாரிமுத்துக்கு பாகம் பிரிக்கப்பட்ட சொத்திற்கும் இடையே ச.எண்.102/2A1ன் தெற்கு புறம் 23 அடி அகலத்தில் கிழமேலாக செல்கிறது எனவும், வருவாய் துறையினரால் பட்டா வழங்கப்பட்ட சமயத்தில் மேற்படி தடவழிக்கு துரைசாமியின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுவிட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையிலும், தரப்பினர்களால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையிலும், மனுதாரர்களால் சாட்டுரைக்கப்பட்டு, எதிர்மனுதாரர்களால் மறுக்கப்பட்ட சங்கதிகள் அனைத்தும் சட்டம் மற்றும் சங்கதிகள் கலந்த எழுவினாக்கள் தொடர்புடையவை என்பதாலும், மேற்படி எழுவினாக்கள் அனைத்தும் இருதரப்பினரது வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் முழுமையான வழக்கு விசாரணைக்கு பின்னரே தீர்மானிக்கத்தக்கவை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(viii) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள அதே உறுத்துக்கட்டளை பரிகாரத்தை இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர்களால் தாவாவில் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது என தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும், அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(ix) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சங்கதி மற்றும் சட்டம் கலந்த எழுவினாவாக உள்ளது என

தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, 5 முதல் 10 வரையிலான பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டி படி கட்டுவதற்காக வாய்தா வைக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொள்கையில், மேற்படி வழக்கில் தரப்பினரிடையே உள்ள பிரச்சனை குறித்து வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(x) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(xi) இருப்பினும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொள்கையில் ச.எண்.102/2A1 தெற்குபுறத்தில் தாவா ABCD தடவழி உள்ளதை எதிர்மனுதாரர்கள் மறுக்கவில்லை என்பதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி தடவழி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகிய இருவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை கருத்தில் கொள்கையிலும், மேற்படி தடவழியின் வடக்கு புறத்தில் பனைமரங்கள் உள்ளதாக இருதரப்பிலும் ஏற்றுக் கொண்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், இவ்வழக்கில் இ.ம.எண்.03/2021 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையிலும், தரப்பினர்கள்

தற்போதுள்ள அவரவர்களின் அனுபவ நிலையில் வழக்கு முடியும் வரை இருதரப்பினரும் உள்ளது உள்ளபடியே வைத்து வரவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(xii) இம்மனுவில் பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட்ட சங்கதிகள் அனைத்தும் இம்மனுவை பொறுத்த முடிவுகள் தான். அவைகள் அசல் வழக்குக்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக ச.எண்.102/2A1 ல் உள்ள தாவா ABCD மற்றும் WXYZ தடவழி பாதைகள் மற்றும் தாவா ABCD தடவழிப்பாதையின் வடக்குபுறத்தில் அமைந்துள்ள பனை மரங்கள் ஆகியவற்றின் மீது தரப்பினர்களின் தற்போதைய அனுபவ நிலை உள்ளது உள்ளபடியே (status quo) வழக்கு முடியும் வரை வைத்திருக்க வேண்டும் எனவும், அவரவர் செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2022.12.23 19:04:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை</u>

R MANIVARMAN Digitally signed by R MANIVARMAN Date: 2022.12.23 19:04:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.